# EASTERN UNIVERSITY SRI LANKA

## FACULTY OF COMMERCE AND MANAGEMENT

## (EXTERNAL DEGREES)

### First Examination in Bachelor of Business Administration /

### First Examination in Bachelor of Economics 2011/2012 (August/September/October 2015) (Proper/Repeat)

### EXB/EXE 1024 PRINCIPLES OF MANAGEMENT

12 OCT 2015

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக. நேரம் - 3 மணித்தியாலங்கள்

---

01. a) முகாமையாளர் குறிப்பிட்ட நிலைமையினை ஆராய்ந்து அந்நிலைமைக்கு ஏற்ப பொருத்தமான திட்டங்களை வகுப்பதற்கு தேவையான அற்றல்களையும் தேர்ச்சித் திறன்களையும் கொண்டிருக்க வேண்டும்.

மேற் கூறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் முகாமைத்துவம் என்ற பதத்திற்கு வரைவிலக்கணம் கூறி முகாமைத்துவ தொழிற்பாடுகள் எவ்வாறு ஓர் நிறுவனத்தின் வெற்றிக்கும் வளர்ச்சிக்கும் பங்களிப்பு செய்கின்றது என்பதை பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக.

(08 புள்ளிகள்)

b) ஹென்றி பயோலின் 14 முகாமைத்துவம் தொடர்பான தத்துவங்களை அடையாளம் கண்டு இத் தத்துவங்கள் எவ்வாறு நிறுவன வெற்றிக்கு பங்களிப்பு செய்கின்றன என்பதை விளக்குக.

(10 புள்ளிகள்)

c) "தீர்மானம் எடுத்தல் எனப்படுவது பல மாற்றுவழிகளில் இருந்து ஒரு மாற்றுவழியினைத் தெரிவு செய்தலைக் குறிக்கின்றது.

மேற் கூறப்பட்ட கூற்றின் அடிப்படையில் தீர்மானம் எடுத்தல் தொடர்பான செயற்பாட்டின் பிரதான படிகளைக விளக்குக.

(06 புள்ளிகள்)

(மொத்தம் 24 புள்ளிகள்)

02. பீட்டர் ட்றகர் என்னும் முகாமைத்துவ அறிஞரின் கருத்துப்படி கூட்டிணைந்த மட்டத்தில் (Corporate level) நிர்ணயிக்கப்படும் நோக்கங்களானது 8 முக்கிய பரப்புக்களுடன் தொடர்புபட்டதாகக் காணப்பட வேண்டும் எனக் குறிப்பிடுகின்றார். மேலும் அந்நோக்கங்களுக்கு தந்திரோபாயங்களானது பக்கபலமாக இருக்காவிடின் அந்நோக்கங்கள் பயனற்றதாகிவிடும்.

a) மேற் கூறப்பட்ட கூற்றின் அடிப்படையில சிறந்த நிறுவன நோக்கத்தின் பிரதான இயல்புகளை விளக்குக.

(6 புள்ளிகள்)

b) "நிறுவன நோக்கங்கள்" மற்றும் "நிறுவன தந்திரோபாயம்" என்பதை வரையறை செய்து அவற்றுக்கிடையிலான தொடர்புகளை விளக்குக?

(6 புள்ளிகள்)

c) திட்டமிடல் செயன்முறையை விளக்குக?

(8 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

03. வினைத்திறனான தலைமைத்துவம் ஒரு நிறுவனத்தில் காணப்படாதுவிடின், அந்நிறுவனத்தின் முகாமைத்துவமும் வினைத்திறனற்றதாகக் காணப்படும். நிறுவனத்தின் முழுமொத்த முகாமைத்துவ செயற்றிறனையும் அதிகரிக்க ஒரு முகாமையாளர் தலைமைத்துவ பங்குகளை விளங்கிக் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

a) "நிறுவன தலைமைத்துவம்" எனும் பதத்தினை விளக்குக?

(4 புள்ளிகள்)

b) பண்புக் கோட்பாட்டினால் அடையாளப்படுத்தப்படும் தலைமைத்துவ இயல்புகளைக் குறிப்படுக?

(8 புள்ளிகள்)

c) "ஜனநாயக தலைவரின்" இயல்புகளை சுருக்கமாக விளக்குக?

(6 புள்ளிகள்)

(மொத்தம் 18 புள்ளிகள்)

04. முறைசார் மற்றும் முறைசாரா தொடர்பாடலானது நிறுவனத்தில் கிடையான மற்றும் செங்குத்தான பாய்ச்சலைக் கொண்டிருக்கும். தொடர்பாடலின் ஒரு பகுதியாக வினைத்திறனான செவிமடுத்தல் காணப்படும். இதற்காக ஒவ்வொரு சொல்லையும் தெளிவாகக் கூறுதல் வேண்டும்.

a) முறைசாரா தொடர்பாடல் என்பதால் கருதப்படுவது யாது? விளக்குக?

(4 புள்ளிகள்)

b) "கிடையான தொடர்பாடல்" மற்றும் "செங்குத்தான தொடர்பாடல்" என்பதற்கிடையிலான வேறுபாட்டை உதாரணத்துடன் விளக்குக?

(6 புள்ளிகள்)

c) வினைத்திறனான செவிமடுத்தலுக்குத் தேவையான விதிகளை விளக்குக?

(10 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

05. தற்போதைய காலகட்டத்தில் பேசப்படுகின்ற ஒரு விடயமாக குழு வேலை காணப்படுகின்றது. இது நிறுவனத்தில் இணைந்த தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

a) பொருத்தமான உதாரணத்தைப் பயன்படுத்தி "இணைந்த தாக்கம்" (SYNERGY) எனும் பதத்தினை விளக்குக.

(6 புள்ளிகள்)

நடத்தைசார் விஞ்ஞானிகளால் முன்வைக்கப்பட்ட ஒரு எண்ணக்கருவே தூண்டுதலாகும். மேலும் இது தற்போதைய காலகட்டத்தில் உள்ளடக்கக் கோட்பாடு (Content Theory) மற்றும் செயன்முறைக் கோட்பாடுகளால் (Process Theory) விளக்கப்படுவதாகக் காணப்படுகிறது.

b) "தூண்டுதல்" என்னும் பதத்தினால் நீர் விளங்குவது யாது?

(4 புள்ளிகள்)

c) உள்ளடக்கக் கோட்பாடு மற்றும் செயன்முறைக் கோட்பாடு என்பவற்றுக்கிடையிலான வேறுபாட்டை விளக்குக. இவை இரண்டுக்கும் உதாரணம் தருக.

(8 புள்ளிகள்)

(மொத்தம் 18 புள்ளிகள்)